**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 175/2019 தேதி: 15.04.2026**

**பி.வா.சா. 1 – ரேவதி**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1ம் பிரதிவாதி எனது சித்தப்பா. அவர் மாவட்ட நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர். 2 ம் பிரதிவாதி எனது தகப்பனார். 1ம் பிரதிவாதி முதுகுதண்டுவட சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்று சொல்லியுள்ளேன். அது சம்பந்தமான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி நல்ல பேசக்கூடிய நிலையில் உள்ளார் என்றால் அவர் மருந்து உட்கொண்டு வருவதால் பேச்சில் தடுமாற்றம் உள்ளது. அவர் நல்ல நிலையில் தான் உள்ளார் என்றும், நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மை நிலையை சொல்லிவிடுவார் என்பதால் உடல்நிலை சரியில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி நுரையீரல் தொற்றுக்காரணமாக 2 மாத ஓய்வில் இருக்க வேண்டி இருப்பதால் 2ம் பிரதிவாதி சாட்சி அளிக்க இயலவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இன்று 2ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் 1.1/2 மாத ஓய்வுக்கு பின்னர் இந்த வழக்கின் விசாரணைக்காக மட்டும் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். வாதியை குறுக்கு விசாரணை செய்யும் காலத்தில் 2ம் பிரதிவாதி அவர் தாக்கல் செய்திருந்த வக்காலத்தை ரத்துசெய்து விட்டு தனி நபராக ( In person ) ஆக குறுக்கு விசாரணை செய்தார் என்றால் சரிதான். நான், 2ம் பிரதிவாதிக்கு சேர்த்து தான் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்காக என்னை வழக்கு நடத்துவதற்கு எனக்கு எந்தவித பொது அதிகார பத்திரமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் பத்தி 3 ல் 5 முதல் 7 பிரதிவாதிகள் இந்த வழக்கில் கையெழுத்து போடவும் இல்லை. வழக்கை நடத்த இஷ்டப்படவும் இல்லை. 5 முதல் 7 வரை வாதிகளின் கையெழுத்தை 1ம் வாதியை போர்ஜரியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். இது சம்பந்தமாக 2ம் பிரதிவாதி 5 முதல் 7 வாதிகளுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார். அந்த நோட்டீசை பெற்றுக்கொண்டு 5 முதல் 7 வாதிகள் எந்த பதிலும் அனுப்பவில்லை. 5 முதல் 7 வாதிகளும் மற்ற வாதிகளும் பேச்சு வார்தகை இல்லாமலும் தொடர்பு இல்லாமலும் இருக்கிறார்கள் என்று சொல்லியுள்ளேன். அதில் 5 முதல் 7 பிரதிவாதிகள் என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அது 5 முதல் 7 வாதிகள் ஆகும். பி.வா.சா.ஆ 19 மேற்படி சங்கதி சம்பந்தமாக அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அதை 2ம் பிரதிவாதி தான் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். உரிமையியல் வழக்கில் தரப்பினர்கள் ஆஜராக வேண்டிய அவசியம் இல்லை. வழக்கறிஞர் ஆஜரானால் போதும். பி.வா.சா.ஆ 19ல் 5, 6, 7 வாதிகள் ஆஜராகவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது 2019ல் வேறு ஒரு வழக்கறிஞரை வைத்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் திரு.பெருமாள்சாமி என்ற வழக்கறிஞருக்கு வக்காலத்தில் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளீர்களா என்று கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு பதில் கொடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லப்படவில்லை.

5 முதல் 7 வாதிகள் இதுவரை எந்தவித பதிலும் கொடுக்கவில்லை. 5 முதல் 7 வாதிகள் கையெழுத்து போட்டார்களா என்றால் 1ம் வாதிக்கும், 5 முதல் 7 வாதிகள் குடும்பத்திற்கும் 25, 30 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லாததால் அவர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க மாட்டார்கள் என்றும், வக்காலத்தில் கையெழுத்து செய்திருக்க மாட்டார்கள் என்பதன் அடிப்படையில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. என்னிடம் காட்டப்படுவது எங்கள் தரப்பில் 6 மற்றும் 7 வாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அசல் என்றால் சரிதான். அது முறையே **வா.சா.ஆ 11, வா.சா.ஆ 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ 11, 12 ஆவணம் அடிப்படையில் 6 மற்றும் 7 வாதிகள் வக்காலத்து மற்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 2019 ல் தாக்கல் செய்யப்பட்ட பிராதிலும், வக்காலத்திலும் 5, 6, 7 வாதிகள் தான் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றும், அதனால் தான் அவர்கள் மேற்படி கவர்களை எங்கள் தரப்பில் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் வழக்கு தாக்கல் செய்ய கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ளார்கள் என்பதை நான் கேட்பதற்கு அருகதை கிடையாது என்றால் சரியல்ல. நான் வழக்கில் தரப்பினராக இருப்பதால் கேள்வி கேட்க எனக்கு உரிமை உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண். 46/1 என்றால் சர்வே எண். 46/1B. பி.வா.சா.ஆ 19 ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண். 44/9 என்று சொல்லப்பட்டுள்ளது. அது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டது. எனக்கு சொத்து விபரமே தெரியாமல் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 46/1B ன் பட்டா எண். 461 ஆகும். பொதுவாக சர்வே எண் மாறாது என்றும், பட்டா எண்

மட்டும் தான் மாறும் என்றால் சில நேரங்களில் பட்டா எண் மாறும், சில நேரங்களில் மாறாது. என்னிடம் காட்டப்படும் 26.03.2017 ம் தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி பட்டா என்றால் சரிதான். அது **வா.சா.ஆ 13**. அதில் பட்டா எண். 461 சர்வே எண். 46/1B சுப்பாரெட்டியார் மகன் நாராயண ரெட்டியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் கண்ட நாராயண ரெட்டியார் எனது தகப்பனாரை பெற்ற தந்தை ஆவார். பி.வா.சா.ஆ 10 ஆவணத்தில் பட்டா எண்.762, சர்வே எண். 46/1B க்கு 1, 2 பிரதிவாதிகள் பெயரில் 1982 ல் கொடுக்கப்பட்டது என்றால் தாவா சொத்திற்கு உரிய பட்டா மட்டும் அல்ல எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட வேறு இரு புல எண்கள் 26/3A மற்றும் 56/3 A ஆகிய சொத்துக்களுக்கு கொடுக்கப்பட்ட கூட்டுப்பட்டா ஆகும். பி.வா.சா.ஆ 10 ஆவணத்தில் பட்டா எண். 762 கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் கட்டுப்பட்டது. இந்த வழக்கில் கண்ட சர்வே எண். 46/1B 1, 2 பிரதிவாதிகளுக்கு 762 நம்பர் பட்டாவில் கட்டுப்பட்டது என்றால் இருக்கலாம். பி.வா.சா.ஆ 10 ஆவணத்தை பொறுத்தவரை 1, 2 பிரதிவாதிகளுக்கு 46/1B, பட்டா எண். 762 பாத்தியம் என்றால் இருக்கலாம். 2018 ல் 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ 2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் பட்டா எண்.461 என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள நத்தம் தூயநிலவரி திட்டம் ஆவணத்தில் தாவா சொத்து பட்டா எண் 461 ல் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ 2 ல் உள்ளது தாசில்தாரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ல் VAO ஆவணம் நகலாக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஜெராக்ஸ் தான்

உள்ளது அது இணைப்பாக உள்ளது. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் 2ம் பிரதிவாதி சொத்து தனக்கு எவ்வாறு பாத்தியம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாம் இருவர் பெயரில் கூட்டாக உள்ள சொத்து என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. தாவா சொத்து கிரைய பாத்தியமா, பூர்விக பாத்தியா என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. ஆனால் அதில் சொல்லியுள்ள சங்கதிகள் படி அது பூர்விக பாத்தியம் ஆகும். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி சொத்தின் சுவாதீனத்தை 2ம் பிரதிவாதி எடுத்துக்கொண்டாரா என்றால் எடுத்துக்கொண்டார். 2ம் பிரதிவாதி மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தனது பெயருக்கு பட்டா மாற்றுவதற்கு மனு எதுவும் கொடுத்தாரா என்றால் மனு கொடுக்கவில்லை அதே தேதியில் எனது பெயரில் சொத்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்ததால் பட்டா மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரே தேதியில் 2ம் பிரதிவாதி முழு சொத்தையும் 3ம் பிரதிவாதியாகிய எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா நாராயண ரெட்டியாருக்கு 1, 2 பிரதிவாதிகளை தவிர 3 பெண் குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பெண் குழந்தைகளின் பெயர் சுப்புதாயம்மாள், லட்சுமியம்மாள் சீத்தம்மாள் என்றால் சரிதான். சுப்புதாயம்மாளுக்கு 4 குழந்தைகள். மங்கலேஸ்வரி, ராமச்சந்திரன், ஜெயமாலா, ராஜலட்சுமி ஆகியோர் 4 குழந்தைகள் ஆவார்கள்.

லட்சுமியம்மாளுக்கு வாரிசு மணிகண்டன் என்றால் சரிதான். சீத்தம்மாளுக்கு வாரிசு இல்லை. மங்கலேஸ்வரியை தான் 1ம் பிரதிவாதி திருமணம் செய்துள்ளார். பெண் மக்களிடம் இருந்து பாக பாத்தியம் விடுதலை பத்திரம் எதுவும் எழுதி வாங்கியுள்ளோமா என்றால் இல்லை. பெண் பிள்ளைகளுக்கு அவர்களுக்குண்டான ஈவினை கொடுத்துவிட்டோம். நாங்கள் மேற்கண்டவாறு எதுவும் கொடுக்கவில்லை என்றும், எங்கள் தரப்பு வழக்கினை வலுவூட்டுவதற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நிருபண வாக்குமூலம் பக்கம் 2 ல் குருவம்மாள் இறந்துவிட்டார் என்றும், அவரது வாரிசுகள் நாராயணன் மற்றும் அவரது சகோதரி வாரிசாக உள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன். ஆனால் அவர்களை இந்த வழக்கில் ஏன் தரப்பினார்களா சேர்க்கவில்லை என்பதற்கு காரணம் எதுவும் கூறவில்லை என்று சொல்லியுள்ளேன். நாராயணன் மற்றும் அவரது சகோதரியை வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு ஆட்சேபணை உள்ளது. நாராயணன் மற்றும் அவரது சகோதரியை முதலில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றும் எங்கள் தரப்பில் சொல்லப்பட்டது. தற்போது அவர்களை தரப்பினர்களாக சேர்ப்பதற்கு ஆட்சேபணை உள்ளது என்று சொல்லியுள்ளீர்கள் என்றும், என்ன ஆட்சேபணை உள்ளது என்றால் மேற்படி நாராயணன் மற்றும் அவரது சகோதரி அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஓ.எஸ்.36/2025 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் அது பி.வா.சா.ஆ 18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஏதாவது உரிமை இருக்கும் பட்சத்தில் அவர்கள் தாக்கல் செய்த வழக்கில் அதை

தேடி கொள்ளலாம். மேற்படி நபர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கு நடத்துவதற்கு எங்களுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

(வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

| |
|---|
| என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>சார்பு நீதிபதி,<br>அருப்புக்கோட்டை. |